# உழவர்கரை நகராட்சி நகர வாழ்வாதார மையம் (OM-CLC)
# நவயுகா கன்சல்டன்சி சர்வீஸ்
## புதுச்சேரி

உலக அளவில் மிக அதிக வேகத்தில் பரவி வரும் கொடிய நோயான கொரோனா வைரஸை (Covid-19) கட்டுப்படுத்த புதுச்சேரி அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. புதுச்சேரி அரசின் நடவடிக்கைகளில் உழவர்கரை நகராட்சியும் பங்குகொண்டு பொதுமக்களிடையே கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது அரசின் ஆணைக்கிணங்க அத்தியாவசிய பொருட்கள் மட்டும் விற்பனை செய்வதோடு சமூக இடைவெளியும் கடைபிடிக்க வேண்டியது மக்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் விற்கும் கடைகள் மட்டும் திறந்து இருக்கும் சூழ்நிலையில் மக்கள் அனைவரும் சமூக இடைவெளியை கடைபிடித்தலின் பொருட்டு வெளியே வருவது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே பொதுமக்களுக்கு உதவுவதற்காகவும் புதுச்சேரி அரசின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் பொருட்டு முதல் முறையாக உழவர்கரை நகராட்சி மற்றும் நவயுகா கன்சல்டன்சி சர்வீஸின் நகர வாழ்வாதார மையம் ஒரு புதிய திட்டமான **“அவசர அழைப்பு மையத்தை”** உருவாக்கி உள்ளது. அதனை தமிழ், ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளில் தொடர்பு கொள்ளலாம்.

அரசு பிறப்பித்துள்ள தடை உத்தரவு நாட்களில் மக்கள் வீட்டை விட்டு வெளியே வராமல் தங்களை பாதுகாத்து கொள்ளவும் அதே சமயத்தில் மக்களுக்கு தேவையான மருத்துவ ஆலோசனை, மனநல ஆலோசனை, மருந்தகம், டெலி யோகா போன்ற அவசர சேவைகளையும் மளிகை, காய்கறி, பழங்கள் போன்ற அத்தியாவசிய பொருட்களையும் வீட்டிலிருந்தபடியே பெற்றுக்கொள்ள பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நகர வாழ்வாதார மையத்தின் மூலம் அவசர கால சேவை மையம் நாளை முதல் செயல்பட உள்ளது. இந்த அவசர கால சேவை மையத்தைத் தொடர்புகொண்டு பொதுமக்கள் தங்களுக்கு தேவையான மருந்து பொருட்கள், தொலைபேசி மூலம் மருத்துவர்களின் உதவி, தங்கள் மனநிலையை பாதுகாத்துக்கொள்ள மனநல ஆலோசனை, வீட்டிலிருந்தே தங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்த யோகா ஆலோசனை போன்ற அவசர சேவைகளையும் மளிகை பொருட்கள், காய்கறிகள், பழங்கள் போன்ற அத்தியாவசிய பொருட்களையும் இம்மையத்தின் தற்காலிக தொடர்பு எண்களான **தமிழ் மற்றும் ஆங்கில மொழிக்கு-7806801159, 7806801160, 7806801161, பிரஞ்சு மொழிக்கு-7806801162** என்ற எண்களில் ஏதேனும் ஒன்றை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்புகொண்டு தொலைபேசி வாயிலாக பெற்றுக்கொள்ளலாம்.

இம்மையத்தின் மூலம் மக்களுக்கு தேவையான மருத்துவ ஆலோசனைகளை வழங்க நல்லாம் மருத்துவமனை, மனநல ஆலோசனைகளை வழங்க பிந்து மோடி, யோகா ஆலோசனைகளை வழங்க லைஃப் ஸ்டைல் யோகா ஸ்டுடியோ, மருந்து பொருட்களை வழங்க அப்போலோ மருந்தகம், பாவா மருந்தகம், அத்தியாவசிய பொருட்களை வழங்க விஜயகணபதி ஸ்டோர்ஸ், அருண் காஸ்ட் பிரைஸ், லே மார்ட், கிராடிடியூடு ஃபார்ம்ஸ், கோவை பழமுதிர் நிலையம், சம்பூரணம் ஃபார்மர்ஸ், ஜெயம் ஃபுட்ஸ் மேலும் பல ஆலோசனையாளர்களும் விற்பனையாளர்கள் முன்வந்துள்ளனர். இந்த சேவையை பெறுவதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | சேவையின் பெயர் | குறைந்தபட்ச ஆர்டர் மதிப்பு | குறைந்தபட்ச விநியோக நேரம் | மற்ற விவரங்கள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ ஆலோசனை | எதுவும் இல்லை | (முன்பதிவின் அடிப்படையில்) | தொலைபேசி வழியில் மட்டும் |
| 2 | மனநல ஆலோசனை | எதுவும் இல்லை | (முன்பதிவின் அடிப்படையில்) | தொலைபேசி வழியில் மட்டும் |
| 3 | யோகா ஆலோசனை | எதுவும் இல்லை | (முன்பதிவின் அடிப்படையில்) | தொலைபேசி வழியில் மட்டும் |
| 4 | மருந்து பொருட்கள் | குறைந்தபட்சம் ரூ. 300 | குறைந்தபட்சம் 3 மணிநேரம் | பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கு மருத்துவரின் அண்மையில் கையொப்பமிட்ட பரிந்துரை சீட்டு கண்டிப்பாக வேண்டும். |
| 5 | மளிகை பொருட்கள் | குறைந்தபட்சம் ரூ. 500 | குறைந்தபட்சம் 7 மணிநேரம் | (முன்பதிவின் அடிப்படையில் டெலிவரி செய்யப்படும்) |
| 6 | காய்கறி மற்றும் பழங்கள் | குறைந்தபட்சம் ரூ. 500 | குறைந்தபட்சம் 5 மணிநேரம் | (முன்பதிவின் அடிப்படையில் டெலிவரி செய்யப்படும்) |

மேலும் www.oulmun.in என்ற இணைய முகவரியை பயன்படுத்தி இது சம்பந்தமான விபரங்களை அறிந்து கொள்ளலாம். விற்பனையாளர் இந்த இணையதளத்தின் மூலம் இந்த சேவைமையத்தில் இணைவதற்குண்டான ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பொதுமக்கள் அனைவரும் மேலே கூறியுள்ள சேவை மையத்தின் எண்களை தொடர்புகொண்டு தங்களுக்கு தேவையான சேவைகளை பெறலாம். அத்தியாவசிய பொருட்களை பெற பயனாளர்களுக்கு ஒரு பிரத்தியேக WhatsApp/SMS செய்தி அனுப்பிவைக்கப்படும். பயனாளர்கள் அனைவரும் தங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை அந்த வடிவத்தில் சேவை மையத்திற்கு அனுப்பி தங்களது தேவையை பதிவு செய்து கொள்ளலாம்.

**இதன் சேவை மையம் செயல்படுவதன் மூலம் மக்கள் யாரும் வெளியே வந்து மிக கொடிய நோயான கொரோனா நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்கப்படுகிறது. இந்த அவசர அழைப்பு மையத்தை அனைவரும் பயன்படுத்தி கொண்டு கொரோனா நோய்த்தொற்று ஏற்படாமல் தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**(G. மலர் கண்ணன்)**

**இயக்குனர், உள்ளாட்சி துறை**

**மற்றும் தலைவர் உழவர்கரை நகராட்சி நகர வாழ்வாதார மையம்**